# உசிலம்பட்டி நகராட்சி
# 2010–2011–ம் ஆண்டு நிர்வாக அறிக்கை

## 1. அமைப்பும், மேலாட்சியும்

### ஆட்சி எல்கை

உசிலம்பட்டி தேர்வு நிலை பேரூராட்சி 11.12.95–ம் நாளிட்ட அரசாணை எண்.244–ன்படி மூன்றாம் நிலை நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வந்தது. அதன்பின் 26.11.97–ம் நாளிட்ட அரசாணை எண். 311 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின்படி இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது.

முன்பிருந்து உசிலம்பட்டி பேரூராட்சி எல்கை முழுவதும் தற்போது நகராட்சி எல்கையாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. உசிலம்பட்டி மாமரத்துப்பட்டி, கருக்கட்டான்பட்டி, வடகாட்டுப்பட்டி கவுண்டன்பட்டி உள்ளடக்கிய வருவாய் கிராமங்கள் முழுவதும் இந்நகராட்சி எல்கைக்குட்பட்டதாகும். இந்நகராட்சி எல்கை 13.84 ச.கி.மீ. பரப்பளவு என கணக்கில் கொள்ளப்பட்டது. தற்போதைய நகர அளவையின்படி 13.85 ச.கி.மீ. ஆகும்.

1991–ம் ஆண்டு கணக்கெடுப்புப்படி உசிலம்பட்டி நகராட்சியன் மக்கள் தொகை 26413 ஆகும். 2001–ம் ஆண்டு கணக்கெடுப்புப்படி மக்கள் தொகை 30601 ஆகும். 2011–ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 35225 அறிக்கை ஆண்டில் நகராட்சியின் எல்கைகளிலும், வார்டுகளிலும் மாற்றம் எதுவும் இல்லை. நகரம் 24 வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

1991–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சி 24 வார்டுகளாக பிரிக்கப்பட்டு வார்டு பிரிவினை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசு ஆணை எண். 244 நாள். 11.12.95 அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

17.5.94–ல் வெளியிடப்பட்ட தமிழ்நாடு அரசிதழில் 1920–ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 25 (199)ல் வெளியிடப்பட்டுள்ள திருத்தத்தில் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையின் அடிப்படையில் அந்தப்பகுதியில் உள்ள தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் மக்கள் தொகை அடிப்படையில் மூன்றில் ஒரு பங்கக் குறையாமலும் தாழ்த்தப்பட்ட மற்றும்ப ழங்குடியினருக்கு ஒதுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்குக்கு பெண் உறுப்பினர்களுக்கு தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் பெண்ணுக்கு ஒதுக்கீடு செய்யும் எண்ணிக்கையும் சேர்த்து ஒதுக்கீடு செய்யப்படவேண்டும் என்று தெரிவத்துள்ளமைக்கு இணங்க வார்டு எண்கள் 8,17 ஆகியவை ஆதிதிராவிடர் வகுப்பினருக்கு அதில் வார்டு எண்.8 ஆதிதிராவிடர் வகுப்பு பெண்களுக்கும் வார்டு எண்கள் 1,3,8,10,11,12,23,24 ஆகிய ஏழு வார்டுகள் பெண்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1.10.2006 முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றம் செயல்பட்டு வருகிறது. இதன்படி நகர்மன்றத் தேர்தல் 2006–ல் நடைபெற்றது. மூன்றாவது முறையாக நகர்மன்றத்தேர்தல் நடைபெற்றது. 1.10.2006 முதல் புதிதாக நகர்மன்றம் செயல்பட்டு வருகிறது.

## <u>இயக்கும் அலுவலர்கள்</u>

அறிக்கை ஆண்டில் 1.4.2010 முதல் 31.3.2011 முடிய கீழ்க்கண்டவாறு ஆணையராக பணிபுரிந்து வந்துள்ளனர்.

1.4.2010 முதல் 31.3.2011 வரை திரு. கே. அச்சையா, எம்.எஸ்.சி., எம்.பில்.,

### 1. பொது நிர்வாக பணியாளர்களின் விபரம்

| பொது நிர்வாக பணியாளர்களின் விபரம் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் | தற்பொழுது பணியிடம் |
|---|---|---|
| 1. மேலாளர் | 1 | 1 |
| 2. கணக்கர் | 1 | 1 |
| 3. இளநிலை உதவியாளர் | 5 | 4 |
| 4. தட்டச்சர் | 1 | 1 |
| 5. கணினி உதவித்திட்ட உதவியாளர் | 1 | 1 |
| 6. வருவாய் உதவியாளர் | 6 | 5 |
| 7. அலுவலக உதவியாளர் | 2 | 2 |
| மொத்தம் | 17 | 15 |

### <u>2. பொறியியல் மற்றும் குடிநீர் பிரிவு</u>

| | | |
|---|---|---|
| 1. பொறியாளர் | 1 | 1 |
| 2. பிட்டர் | 1 | 1 |
| 3. டிரைவர் | 1 | 1 |
| 4. காவலர் | 1 | 1 |
| 5. திறப்பாளர் | 1 | 1 |
| 6. ஓவர்சியர் | 1 | 1 |
| 3. தெருவிளக்கு | – | – |
| 4. நகரமைப்பு பிரிவு | 1 | 1 |
| 5. துப்புரவுப் பிரிவு | | |
| 1. துப்புரவுப் ஆய்வாளர் | 2 | 2 |
| 2. துப்புரவுப் பணி மேற்பார்வையாளர் | 4 | 4 |
| 3. டிரைவர் | 3 | 3 |
| 4. கிளீனர் | 1 | 1 |
| 5. துப்புரவுப் பணியாளர் | 82 | 76 |
| 6. மருத்துவப்பணி | 12 | 11 |
| | 111 | 104 |

**<u>தேர்தல்கள்</u>**

உசிலம்பட்டி நகர்மன்றத்திற்கு 18.10.2007–ல் தேர்தல் நடைபெற்று நகர்மன்றத்தலைவர் மற்றும் 24 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 25.10.2006 முதல் பொறுப்பேற்றுள்ளனர்.

**<u>மன்றம்</u>**

அறிக்கை ஆண்டில் திருமதி. த. பழனியம்மாள், நகர்மன்றத் தலைவராகவும், திரு.வி.சின்னன், நகர்மன்றத் துணைத்தலைவராகவும் கீழ்க்கண்ட நபர்கள் நகர்மன்ற உறுப்பினராகவும் செயல்பட்டு வருகின்றனர்.

| வ.எண். | உறுப்பினர் பெயர் | வார்டு எண். |
|---|---|---|
| 1. | திருமதி. என். செல்லத்தாய் | 1 |
| 2. | திரு. ஆ. காளிதாஸ் | 2 |
| 3. | திருமதி. கு. விஜயலட்சுமி | 3 |
| 4. | திருமதி. சி. ஜான்சிராணி | 4 |
| 5. | திரு. எம். சொக்கலிங்கம் | 5 |
| 6. | திருமதி. சு. ரஞ்சனி | 6 |
| 7. | திரு.பி. பழனிக்குமார் | 7 |
| 8. | திருமதி. கே. காத்தம்மாள் | 8 |
| 9. | திரு. இ. சுதந்திரம் | 9 |
| 10. | திருமதி. ந. ஒச்சம்மாள் | 11 |
| 11. | திருமதி. ம. ரமா | 12 |
| 12. | திரு.கே. முகமதுவாஉறித் | 13 |
| 13. | திரு. வி. பாலமுருகன் | 14 |
| 14. | திரு. வி. சின்னன் | 15 |
| 15. | திரு. எம். மணிமாறன் | 16 |
| 16. | திரு. எ. நெருஞ்சி | 17 |
| 17. | திரு. எஸ். உக்கிரபாண்டி | 18 |
| 18. | திரு. பி. பால்பாண்டி | 19 |
| 19. | திரு. பி. சுந்தரமூர்த்தி | 20 |
| 20. | திரு. வி. துரைச்சாமி | 21 |
| 21. | திருமதி. பி. முத்துவீரம்மாள் | 22 |
| 22. | திருமதி. எம். மாலதி | 23 |
| 23. | திருமதி. போ. சசிகலா | 24 |

**குழு உறுப்பினர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | நியமனக்குழு உறுப்பினர் | – | திரு. ஆ. காளிதாஸ்–2 |
| 2. | ஒப்பந்தக்குழு உறுப்பினர் | – | திருமதி.எம். மாலதி –23 |
| 3. | வரிமேல்முறையீட்டுக்குழு உறுப்பினர் | – | 1. திரு. பி. சுந்தரமூர்த்தி –20<br>2. திரு. வி. துரைச்சாமி–21<br>3. திரு. என். பால்பாண்டி –19<br>4. திரு.கே.முகமதுவாஉறித் –13 |

**நகர்மன்றக் கூட்டங்கள்**

அறிக்கை ஆண்டில் கீழ்க்கண்ட விவரப்படி நகர்மன்றக் கூட்டங்கள் நடத்தப்பட்டு பொருட்கள் முடிவு செய்யப்பட்டுள்ளன.

**நகர்மன்ற கூட்டங்களின் நடவடிக்கைகள் எண்ணிக்கை**

| | | | |
|---|---|---|---|
| 1. | சாதாரணம் | – | 5 |
| 2. | சிறப்பு | – | – |
| 3. | அவசரம் | – | 3 |

**மன்றம் முடிவு செய்த பொருட்கள்**

அறிக்கை ஆண்டில் 70 பொருட்கள் முடிவு செய்யப்பட்டன. தமிழக அரசின் ஒழுங்கு விதிகளின்படி நடைமுறை திட்டங்கள் நழுவாமல் கடைபிடிக்கப்பட்டுள்ளது.

**குழுக்கள்**

திருத்தப்பட்ட 1920–ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தில் 73–வது பிரிவின் கீழ் நியமனக்குழுவில் 68(51)வது பிரிவின் கீழ் ஒப்பந்தக்குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

**நிலையான குழுக்களும், பிற குழுக்களும்.**

அறிக்கையாண்டில் குறிப்பிடப்பட்டுளள் குழுக்கள் கூடிய கூட்டங்கள் அவைகள் ஆய்வு முடிவு செய்த பொருட்கள் விவரம் கொடுக்கப்பட்டிருக்கின்றனர்.

| குழுக்கள் | நடந்த கூட்டங்களின் எண்ணிக்கை | முடிவு செய்யப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | நியமனக்குழு | – |
| 2. | ஒப்பந்தக்குழு | – |
| 3. | வரிமுறையீட்டுக்குழு | – |
| 4. | உள்ளூர் திட்டக்குழு | – |

<u>நிர்வாக செலவுகள்</u>

1. அறிக்கை ஆண்டில் பொதுநிதிக்கணக்குத் தலைப்பின் கீழ் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கும் வகையில் ஆன செலவு 122.00 லட்சம் ஆகும். சென்ற ஆண்டு செலவு 100.06 லட்சம் ஆகும்.

<u>2. மேல்முறையீடு</u>

இல்லை

<u>3. இடவசதி</u>

ரூ. 50/–லட்சம் மதிப்பீட்டில் நகராட்சி அலுவலகம் கட்ட நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டு வேலைஉத்திரவு வழங்கப்பட்டு கட்டிடம் கட்டும் பணிமுடிவுறும் நிலையில் உள்ளது.

<u>4. வழக்குகளுக்கும், சட்ட செலவுகளும்</u>

அ. நகர்மன்றத்திற்கென பிரத்தியோகமாக வழக்கறிஞர் – திரு. கணபதி

ஆ. 1.4.2010 நிலுவையாக இருந்த வழக்குகளின் எண்ணிக்கை –6 நிறைவேற்ற மனுக்கள் உட்பட.

இ. அறிக்கை ஆண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை –3

அறிக்கை ஆண்டில் வழக்குகள் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டமைக்கு 9 வழக்கு நடைபெற்று வருகிறது.

அரசு வழக்கறிஞருக்கு வழங்கப்பட்ட செலவினத்தொகை ரூ. 25,000/– ஆகும்.

**சாலைகள் – பாலங்கள் – கட்டிடங்கள் பணியாளர்கள்**

இத்தணிக்கை ஆண்டில் நகராட்சிப் பொறியாளர் மற்றும் பொதுப்பணி மேற்பார்வையாளராக கீழ்க்கண்ட அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

**பொறியாளர்கள்**

1.4.10 முதல் 31.3.2011 திரு. என். சரவணக்குமார்

**பொதுப்பணி மேற்பார்வையாளர்**

1.4.10 முதல் 31.3.2011 வரை திரு. டி. பாலாஜி

**அ. சாலைகள், பாலங்கள், பரிசல்கள், கட்டிடங்கள் முதலியன**

1. உசிலம்பட்டி – மதுரை சாலை
2. உசிலம்பட்டி – தேனி சாலை
3. உசிலம்பட்டி – பேரையூர் சாலை
4. உசிலம்பட்டி – வத்தலக்குண்டு சாலை

மேற்கண்ட நான்கு சாலைகளும் நெடுஞ்சாலைத்துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

ஆ) இந்நகர்மன்றத்தின் பராமரிப்பில் கல் உடைப்பு அரங்கு ஏதும் இல்லை. இந்நகராட்சியின் பராமரிப்பில் உள்ள சாலைவேலைகளுக்குத் தேவையான கருங்கற்கள் யாவும் நகரிலிருந்து சுமார் 5 கிலோமீட்டர் துாரத்தொலைவில் உள்ள நக்கலப்பட்டி என்ற கிராமத்தில் உள்ள கல் உடைப்பு அரங்கிலிருந்து கொண்டு வரப்படுகிறது. மேற்படி கல் உடைப்பு அரங்கம் சாலைக்கு அருகாமையிலும், போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் போதிய வசதியாகவும், அமைந்துள்ளது. இந்நகராட்சியின் பராமரிப்பில் உள்ள சாலை வேலைகளுக்குத் தேவையான ஜல்லிகளும், சரளையும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் பெறப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

அறிக்கை ஆண்டில் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வந்துள்ள மொத்த சாலைகள் விவரம் கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | சாலை விபரம் | சென்ற ஆண்டு | அறிக்கை ஆண்டு போடப்பட்டவை | ஆண்டு இறுதியில் |
|---|---|---|---|---|
| 1. | தார்சாலைகள் | 11.305கி.மீ | 2.000 | 16.475கி.மீ |
| 2. | சிமிண்ட் சாலைகள் | 4.10.5 கி.மீ | 1.000 | 3.558 கி.மீ |
| 3. | மெட்டல் சாலை | 3.940கி.மீ | – | 3.190 கி.மீ |
| 4. | பரவுகல் சாலை | 2.745 கி.மீ | – | 2.745 கி.மீ |
| 5. | கற்ச் சாலை | 2.940 கி.மீ | – | 3.190 கி.மீ |
| 6. | மண்சாலை | 2.195கி.மீ | – | 1.345 கி.மீ |
| | மொத்தம் | 27.230கி.மீ | – | 30.503 கி.மீ |

இந்நகராட்சியால் பராமரிக்கப்படும் சாலைகள் அனைத்தும் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. சாலைகள் பராமரிப்பிற்கென அறிக்கை ஆண்டில் ரூ. 3.51 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**<u>ஓய்வு விடுதிகள் சத்திரங்கள் தண்ணீர் பந்தல்.</u>**

இந்நகராட்சிக்குச் சொந்தமான வழிச் செல்வோர் தங்கும் விடுதி வசதி, தண்ணீர் பந்தல்கள் எதுவுமில்லை. ஆனால் நெடுஞ்சாலை மற்றும் கிராமப் புறப்பணி துறையினரால் தங்கும் விடுதி ஒன்று நகர எல்லைக்குள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

ஒரு நூலகம் இயங்கி வருகிறது. நடப்பாண்டில் நூலகவரியாக இந்நகராட்சிக்கு ரூ. 8.52 லட்சம் வசூல் செய்யப்பட்டு அதில் நூலக ஆணைக்குழுவிற்கு ரூ. 8.00 லட்சம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்நகரில் பெரிய தொழிற்சாலைகள் ஒன்றும் இல்லை. ஆடுவதை செய்யும் தொட்டி சந்தைகள் பேருந்து நிலைய பெட்டிக்கடைகள் ஆகியவற்றின் கேட்பு மற்றுடம் அவை தினசரி சந்தை மூலம் கிடைத்த ஆண்டு வருமானம் கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

| ஆண்டு | வாராச்சந்தை தினசரி சந்தை | ஆடு அடிக்கும் தொட்டி | பேருந்து நிலைய பெட்டிக்கடைகள் | கட்டண கழிப்பறை | பேருந்து நிலைய கட்டண வசூல் |
|---|---|---|---|---|---|
| 2010–2011 | 2,91,000/– | 35,000/– | ரூ. 5,05,000/– | ரூ.1,72,000 | ரூ. 4,25,000 |

இந்நகராட்சி பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் பாத்தியதை பொது ஏலத்தில் விடப்பட்டு இதன்மூலம் இந்நகராட்சிக்கு ரூ. 4,25,000/– வருவாய் கிடைத்துள்ளது.

**<u>பூங்கா மற்றும் மரம் வளர்ப்பு</u>**

2009–2010–ம் ஆண்டில் 100 மரங்கள் நடப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் பராமரிப்பில் பூங்கா விளையாட்டு மைதானம் வாசகசாலை எதுவுமில்லை வானொலி மையம் பராமரிக்கப்படவில்லை.

**<u>பொறிகளும், கருவிகளும்</u>**

இந்நகராட்சியில் சாலை உருளை பொறி இல்லை. தேவைப்படும் சமயம் நெடுஞ்சாலைத்துறையினரிடமிருந்தும் அருகில் உள்ள நகராட்சிகளிடமிருந்தும் தனியாரிடமிருந்தும் வாடகைக்கு பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நகராட்சியில் குடிநீர் விநியோகத்திற்கான 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட டேங்கருடன் கூடிய லாரி ஒன்று உபயோகத்தில் உள்ளது.

## தெருவிளக்கு வசதிகள்

நகராட்சிப்பகுதிகளில் உள்ள தெருவிளக்குகள் அனைத்தும் பராமரிக்கும் பணியை நகராட்சியே மேற்கொண்டுள்ளது. தெருவிளக்குகள் பராமரிப்பு பணியை மேற்கொள்ள பணியாளர்கள் அரசால் தோற்றுவிக்கப்படவில்லை. அறிக்கை ஆண்டில் மின் விளக்குகள் கணக்கில் ரூ. 21.50 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு 20.00 லட்சம் செலவு செய்யப்பட்டது.

## அறிக்கை ஆண்டில் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் விளக்குகள் விபரம்

| | | | |
|---|---|---|---|
| 1. | மெர்க்குரி ஆவிவிளக்கு | – | 3 |
| 2. | குழல் விளக்குகள் | – | 1035 |
| 3. | சோடியம் ஆவி விளக்குகள் | – | 119 |
| 4. | உயர்மின் கோபுர விளக்கு | – | 2 |
| | | – | 1159 |

## ஈமச்சடங்கு நிதி உதவி

2010–2011–ம் ஆண்டிற்கு ஈமச்சடங்கு நிதி உதவிக்காக பெறப்பட்ட நிதியில் இருந்து 49 நபர்களுக்கு ரூ.500 வீதம் ரூ. 30500 செலவு செய்யப்பட்டுள்ளது. அதற்கு செலவினத்திற்கு அரசு மான்யம் வரப்பட்டுள்ளது போக கூடுதலாக பொதுநிதியிலிருந்து வழங்கிய தொகையை மீளபெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## குடிநீர் விநியோகம்

உசிலம்பட்டி நகராட்சிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் உசிலம்பட்டி நகரிலிருந்து மேற்கே 21 கி.மீ. தொலைவில் உளள் எஸ். மேட்டுப்பட்டி, அணைப்பட்டி வைகை ஆற்றுப்படுகையில், அமைந்துள்ள தலைமை நீரேற்று நிலையம் மூலமும் மற்றும் ஆண்டிபட்டி, சேடபட்டி கூட்டுக்குடிநீர் திட்டத்தின் மூலம் கிடைக்கப்பெறுகிறது.

மேற்படி தண்ணீர் தலைமை நீரேற்று நிலையத்தில் இரண்ட 100 எச்.பி. மின் குதிரை திறன் கொண்ட மோட்டார் மூலம் தண்ணீர் இறைக்கப்பட்டு நகரில் உள்ள 4.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட 2 மேல்நிலைத்தொட்டியில் சேகரிக்கப்பட்டு பகிர்மானக்குழாய்கள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மொத்தம் 18 லட்சம் லிட்டர் பம்பிங் செய்து வழிக்கிராமங்களுக்கு 2 லட்சம் லிட்டரும், உசிலம்பட்டி நகருக்கு 16 லட்சம் லிட்டரும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. நகரில் 99 பொதுக்குடிநீர் குழாய்களும் 136 கைப்பம்புடன் கூடிய ஆழ்குழாய் கிணறுகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் மாமரத்துப்பட்டி காளவாசல் பகுதியில் ஆழ்குழாய் கிணறு இருக்கிறது. அறிக்கை ஆண்டில் வறட்சி நிவாரணத்திட்டத்தின் கீழ் ரூ. 12.00 லட்சம் செலவில் பவர்பம்புகள் மற்றும் மினிபவர் பம்புகள் பொருத்தப்பட்டு மக்களின் குடிநீர் பிரச்சனை தீர்க்கப்பட்டது.

அறிக்கை ஆண்டில் 276 வீடுகளுக்கு புதிய குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. நகராட்சிப்பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்கு மொத்தம் 4787 குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. தண்ணீர் விநியோகக்கணக்கில் ரூ. 28.56 லட்சம் வருமானமாக கிடைக்கிறது. தண்ணீர் விநியோகிக்கப்படாத பகுதிகளுக்கு 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நகராட்சி லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மொத்த குடிநீர் குழாய் இணைப்புகள் முழுவதும் நடப்பாண்டில் செயல்பட்டு வருகிறது.

**<u>பாதாள சாக்கடை திட்டம்</u>**

இந்நகரில் பாதாளசாக்கடை திட்டம் ரூ. 22.00 கோடி மதிப்பீட்டில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நடைபெறும் நிலையில் உள்ளது.

**<u>கணினிப்பிரிவு</u>**

இவ்வலுவக கணினிப் பிரிவிற்கு டி.என்யி.டி.பி–2, திட்டத்தின் கீழ் பென்டியம் 133 மெ.வேகமுள்ள 10 கணினிகளும், 2 டாட்மேட்ரிக்ஸ், 3 லேசர் பிரிண்டர் 1 ஸ்கேனர் அதற்குண்டான உபகரணங்கள் மற்றும் தேவையான மென் பொருள்களும் வழங்கப்பட்டுள்ளது. கணினிப்பிரிவு ஒரு உதவிதிட்ட அமைப்பாளரின் கீழ் இயங்கி வருகிறது. 1.4.2010 முதல் 31.3.2011 வரை திரு. எஸ். துரைச்சாமி, எம்.காம்.,பி.ஜி.டி.சி.ஏ., உதவித்திட்ட அமைப்பாளராக பணியாற்றி வருகிறார்.

**<u>மின் ஆளுமை</u>**

1990–ம் ஆண்டு முதல் நகராட்சியில் பராமரிக்கப்படும் மற்றும் புதிதாகப் பதியப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் இறந்து பிறந்த குழந்தைகளின் விவரங்கள் அனைத்தும் கணினியில் பதியப்பட்டு கணினி மூலம் சான்றிதழ் அச்சு செய்யப்பட்டு காலதாமதம் இல்லாமல் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் சொத்துவரி, குடிநீர் கட்டணம், போன்ற வருவாய் இனங்களும் கணினியில் பதியப்பட்டு அன்றாடம் வசூலாகும் வரிகள் அனைத்தும் உடனுக்குடன் கணினியில் பதியப்பட்டு வருகிறது.

இவ்வலுவலக நகராட்சி வரவு, செலவு கணக்குகள் (Accrual, Based Accounting system) அன்றாடம் கணினியில் செலுத்துச்சீட்டுகள் (vouchers) மூலம் பதியப்பட்டு வருகறிது.

இவ்வலுவலக கணினி இன்டர்நெட் இணைப்பின் மூலம் இணைக்கப்பட்டு இ–மெயில் (commr.usilampatti@tn.gov.in) வசதியுடன் நகராட்சி நிர்வாக ஆணையர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், பிற நகராட்சிகள் மற்றும் பிற அலுவலகங்களில் இருந்து இ–மெயில் மூலம் வரும் கடிதங்கள் உடனுக்குடன் பெறப்பட்டு அதற்கான பதில்கள் இ–மெயில் மூலம் அனுப்பப்பட்டு விரைவில் முடிக்கப்படுகிறது.

மாதந்தோறும் நகராட்சி உள் மற்றும் வெளி பணியாளர்கள் சம்பள பட்டியல் கணினி மூலம் பதிவு செய்யப்பட்டு ஒவ்வொருவருக்கும் (Pay slip) கொடுக்கப்பட்டு வருகிறது.

மாதாந்தோறும் அனுப்பப்படும் பொறியியல் பிரிவு பணிகள் குறித்த முன்னேற்ற அறிக்கைகள், எஸ்.ஜே.எஸ்.ஆர்.ஒய். அறிக்கைகள் மற்றும் பிற அறிக்கைகள் போன்ற பணிகளை அந்தநந்த பிரிவு பணியாளர்களே கணினிகளை இயக்கி அச்சுப்பிரதிகள் எடுத்துக்கொடுக்க உதவித்திட்ட அமைப்பாளர் மூலம் பயிற்சி கொடுக்கப்பட்டு வேலைகள் செவ்வனே நடந்து வருகிறது.

கணினிப்பணிகள் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குரால் மாதந்தோறும் அவ்வப்போது நிர்வாக ஆணையர் சென்னை மற்றும் திட்ட இயக்குநர் டிஎன்யுடிபி–2, சென்னை அவர்கள் மூலம் ஆய்வுக்கூட்டம் நடத்தி ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

வருகிற நிதியாண்டில் சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி, மற்றும் வரியில்லா இனங்கள் கணினி மயமாக்கப்பட்டு உடனுக்குடன் கணினி மூலம் ரசீது வழங்கப்பட்டு வருகிறது.

**<u>தீயணைப்பு நிலையம்</u>**

நகரில் மதுரை சாலையில் தீயணைப்பு நிலையம் ஒன்று ஒரு தீயணைப்பு ஊர்தியுடன் செயல்பட்டு வருகிறது.

**<u>நகரமைப்புத்திட்டம்</u>**

நகர் அபிவிருத்தி திட்டம் மற்றும் முழுமை திட்டம் ஆகியவைகள் துறை மூலம் தயாரிக்கப்பட்டு அரசு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. அரசு ஒப்புதல் பெற்றவுடன் இத்திட்டம் முழுமையாக செயல்படுத்தப்படும், தற்போது இந்நகராட்சி எல்லைப்பகுதிகளில் கட்டப்படும் கட்டிடங்களுக்கு கட்டிட விதிகளின்படி உரிமம், கட்டிட அனுமதி 109 கட்டிடங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**<u>ஆக்கிரமிப்பு கட்டணம்</u>**

சாலை ஓரம் மற்றும் தெரு ஓரங்களில் தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த ஆக்கிரமிப்புகள் அப்புறப்படுத்தப்பட்டுவிட்டபடியால் அறிக்கை ஆண்டில் ஆக்கிரமிப்பு கட்டணம் ஏதும் வசூலிக்கப்படவில்லை.

**<u>வருவாய் கணக்கு</u>**

இந்நகராட்சியில் வருவாய் ஆய்வர் பணியிடம் தோற்றுவிக்கப்படவில்லையாதலால், வருவாய் உதவியாளர்கள் மட்டுமே பணியாற்றி வருகின்றனர். அறிக்கை ஆண்டில் கீழ்க்கண்ட விகிதப்படி சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது.

| வரி இனம் | | | அரையாண்டிற்கான விகிதம் |
|---|---|---|---|
| 1. | பொதுக்காரியங்களுக்கு | – | 3.00 |
| 2. | விளக்குவரி | – | 2.00 |
| 3. | கல்வி வரி | – | – |
| 4. | தண்ணீர் மற்றும் சாக்கடை வரி | – | 7.00 |
| 5. | மலத்துப்புரவு வரி | – | 1.50 |

**<u>குடும்பநலத்திட்டம்</u>**

அறிக்கை ஆண்டில் இந்நகராட்சிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் திட்டத்தின் கீழ் இலக்கு ஏதும் நிர்ணயம் செய்யப்படவில்லை.

**<u>பிறப்புகளும் மகப்பேறு உதவியும்</u>**

அறிக்கையாண்டில் பதிவான மொத்த பிறப்புகளின் எண்ணிக்கை 2733 இறப்புகளின் எண்ணிக்கை 241 இளம் சிறா இறப்பு 32.

**<u>இறப்பு – இறப்பு விகிதம்</u>**

அறிக்கை ஆண்டில் பதிவான இறப்புகள் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| ஆஸ்துமா | – | 07 |
| இளஞ்சிறார் இறப்பு | – | 05 |
| மற்ற இறப்புகள் | – | 229 |
| மொத்தம் | – | 241 |

**<u>பெரியம்மை</u>**

பெரியம்மை நோய் ஒழிக்கப்பட்டுவிட்டதால் அம்மை மருந்து தற்போது நடைமுறையில்லை, பிறப்பு, இறப்பு பதிவு செய்ய தகுதி பெற்ற துப்புரவு ஆய்வாளர் இருவர் பணிபுரிந்து வருகிறார்கள்.

**<u>வாந்திபேதி</u>**

இவ்வாண்டில் வாந்தி பேதி ஏற்பட்டு ஒருவரும் இறக்க நேரிடவில்லை.

**<u>மலேரியா தடுப்பு கொசுத்தடுப்பு</u>**

மலேரியா கொசுத்தடுப்பு சட்டம் இந்நகரில் அமுலில் இல்லை. இருப்பினும் அவ்வப்போது கொசுத்தடுப்பு இயக்குநர் அலவலகத்தில் அங்கீகரிக்கப்பட்ட கொசு தடுப்பு மருந்து நகரில் உள்ள கழிவு நீர் வாய்க்காலில் தெளிக்கப்பட்டு வருகிறது.

**<u>பொதுக்கழிப்பிடம்‘</u>**

இந்நகராட்சியில் மொத்தம் 12 பொது கழிப்பிடங்கள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசாணை எண்(டி) 296 நாள். 20.7.96 படி.

**<u>பொதுவரி திருத்தம்.</u>**

சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 01–04–2008–ம் தேதிய சுற்றறிக்கை எண்.69517.97/ஆர்.1ல் அறிவுறுத்தியபடி 01.04.2008 முதல் பொதுவரி திருத்தம் செய்யப்பட்டு சொத்துவரி உயர்வு செய்யப்பட்டுள்ளது.

**<u>வரிவசூல்</u>**

2010–11–ம் ஆண்டுக்கான சொத்துவரி செலுத்த கேட்புத்தொகை இதில் வழக்கு மன்ற நடவடிக்கைக்குட்பட்ட தொகை ஏதுமில்லை. அரசு கட்டிடங்களுக்கான கேட்பு தொகை ரூ. 1.80 லட்சம் ஆகும். மொத்தவரி வசூலில் முழுமையாக 88 விழுக்காடு வசூல் செய்து முடிக்கப்பட்டுள்ளது. வழக்கு மன்ற நடவடிக்கைக்குட்பட்ட கேட்பு ஏதும் இல்லை.

**<u>தொழில்வரி</u>**

அறிக்கை ஆண்டில் 2010–11 மொத்த தொழில்வரி கேட்பு 12.53 லட்சத்தில் 12.53 லட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது.

**<u>வரி இல்லாத இனங்கள்</u>**

மொத்த கேட்புத்தொகை ரூ. 12.17 லட்சத்தில் ரூ. 11.38 லட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள நிலுவைத்தொகை ரூ. 25.91 முந்தைய நிலுவைத்தொகையாகும். மேற்படி நிலுவைத்தொகையினை வசூல் செய்ய வழக்கு மன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வழக்குகள் நிலுவையாக உள்ளது.

**<u>பொது சுகாதாரம், மருத்துவமனை</u>**

அறிக்கை ஆண்டில் இந்நகராட்சியால் மருந்தகம், நகர்நலமையம் மூலம் தாய்சேய்நலம் மற்றும் மகப்பேறும் பேணப்படுகிறது. நகரில் அரசினரின் பராமரிப்பில் ஒரு மருத்துவமனையும் தனி நபர்களால் 11 மருத்துவமனைகளும் இயங்கி வந்துள்ளன.

2000–2001–ம் ஆண்டு முதல் மகப்பேறு மருத்துவமனை குழந்தைகள் நலம் பேணும் திட்டத்தில் (நகர்நல மையம்) மையம் திறக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் குழந்தைகள் நலம் பேணுதல் திட்டத்தின் கீழ் மகப்பேறு மருத்துவமனை நகராட்சிக்குச் சொந்தமான பேரையூர் ரோட்டில் புதியதாக கட்டிடம் கட்டப்பட்டு புதிய கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

இந்நகராட்சிக்கு கீழ்க்கண்ட விபரப்படிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | பதவி | அனுமதிக்கப்பட்ட பணியிடம் |
|---|---|---|
| 1. | மருத்துவ அதிகாரி | 1 (காலியாக உள்ளது) |
| 2. | செவிலியர் | 3 |
| 3. | கம்யூட்டர் கம் கிளார்க் | 1 (காலியிடம்) |
| 4. | ஏ.என்.எம். | 4 (1 காலியிடம்) |
| 5. | துப்புரவு பணியாளர் | 3 |

இம் மருத்துவமனையில் அறிக்கையாண்டில் வெளிநோயாளிகள் சுமார் 12008 பேர்களும் சென்ற ஆண்டில் சுமார் 16341 பேர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. மற்றும் அறிக்கையாண்டில் 99 பெண்களுக்கும் சென்ற ஆண்டில் 222 பெண்களுக்கும் பிரசவம் பார்க்கப்பட்டுள்ளது.

**<u>நோய் தடுப்பு மருத்துவம்</u>**

இந்நகராட்சியில் இரு துப்புரவு ஆய்வாளர்கள் மட்டும் அடிறக்கையாண்டில் பணிபுரிந்து வருகின்றனர். இந்நகராட்சிப்பகுதியில் தடுப்பூசித்திட்டம் தொட்டப்பநாயக்கனூர், உத்தப்பநாயக்கனூர் மற்றும் அல்லிகுண்டம் ஆரம்ப சுகாதார களப்பணியாளர்களுடன் இணைத்து செயல்படுத்தப்பட்டது.

**<u>போலியோ ஒழிப்புத்திட்டம்</u>**

நடப்பாண்டில் ஜனவரி மாதத்தில் 2993 குந்தைகளும் மற்றும் பிப்ரவரி மாதத்தில் 2947 குழந்தைகளுக்கும் போலியோ ஒழிப்புத்திட்டத்தின் கீழ் 2993 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து போடப்பட்டது. இதனால் நகராட்சிப்பகுதியில் உள்ள குழந்தைகள் எவரும் போலியோ நோய் தாக்கம் ஏதுமில்லை.

இப்பணி நகராட்சி துப்புரவு ஆய்வர் ஆரம்ப சுகாதார நிலைய பணியாளர்கள் துப்புரவுப்பணி மேற்பார்வையாளர்களால் செய்து முடிக்கப்பட்டது. மதுரை அலுவலகத்திலிருந்து பெறப்பட்டது. நகராட்சிக்குச் சொந்தமான கட்டண கழிப்பிடங்கள் அனைத்தும் பொது ஏலம் விடப்பட்டு 2010–2011–ம் ஆண்டிற்கு ரூ. 1.75 லட்சம் வருமானம் வரப்பெறப்பட்டுள்ளது.

நகராட்சியில் மொத்தம் 10100 குடியிருப்பு வீடுகள் உள்ளது. இவற்றில் வீடுகளில் கழிப்பிட வசதி உள்ளது. பல வீடுகளில் கழிப்பறை கட்ட போதிய இடவசதி இல்லை. குடிசை வீடுகளாகவும், கிராமப்புற பகுதியாக உள்ளது.

**<u>திடக்கழிவு மேலாண்மை.</u>**

திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2000 மற்றும் அரசாணை நிலை எண். 159 நாள். 21.12.2001 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித எண். ஆகியவற்றில் வழங்கப்பட்ட அறிவுரைகளுக்குட்பட்டு வழங்கப்பட்ட இந்நகராட்டிசியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 12 தள்ளுவண்டிகள் வாங்கப்பட்டு 24 வார்டுகளில் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை பிரித்து வழங்கும்பணி காலையில் 12 வார்டுகளிலும், மாலையில் 12 வார்டுகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆனால் கூடுதலாக 12 தள்ளுவண்டிகள் தேவைப்படுகின்றன. அவற்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அவை வாங்கப்பட்ட உடன் 24 வார்டுகளிலும் திக்கழிவு மேலாண்மை திட்டப்படி குப்பைகளை பிரித்து வாங்கும்பணி முழுமையாக செயல்படத்தப்படும் மேலும் பிளாஸ்டிக் பொருட்கள் அபாயத்தை கருதி மக்கள் விழிப்புணர்வு இயக்கம் நடத்தப்பட்டு அவற்றை தனியார் பிரித்து எடுக்கப்பட்டு விற்பனைக்கு சேகரிக்கப்பட்டு வருகிறது. குப்பைகளை நகராட்சிப்பகுதியில் எக்காரணம் கொண்டும் எரிக்காமல் இருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**<u>உரக்கிடங்கு</u>**

இந்நகராட்சியில் மாமரத்துப்பட்டி தேனி பிரதான சாலைக்கு அருகில் 1.54 ஏக்கர் அளவில் உரக்கிடங்கு நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வருகிறது. தற்போது இவ்வுரக்கிடங்கு பெருகி வரும் மக்கள் தொகை குப்பைகளுக்கு போதுமானதாக இல்லை. இதனால் பகுதி 2 திட்டத்தின் கீழ் உரக்கிடங்கை மேம்படுத்த ரூ. 4.50 லட்சம் அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது.

**<u>வீட்டுமல அறைகள்</u>**

வீடுகள் கட்டுவதற்கு உரிமையாணை வழங்கம்போது மல அறைகள் கட்டுவதற்கு உரிய நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்படுகிறது. மனிதர்களால் மலம் எடுப்பது தடைச்சட்டத்தின் கீழ் உசிலம்பட்டி நகராட்சி துப்புரவுப்பணி தொழிலாளர்களைக் கொண்டு மலம் எடுப்பது நிறுத்தப்பட்டுவிட்டது. கலவை உரம் தயார் செய்ய இந்நகராட்சிக்குச் சொந்தமான இடம் இல்லையாதலால் தனியாக இடம் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பொதுநலச்சட்டத்தின் கீழ் உள்ள உணவுப்பொருட்கள் கட்டுப்பாடு பற்றிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. உணவு கலப்படதடை திட்டம் மற்றும் பயிற்சி பெற்ற துப்புரவு ஆய்வர் இல்லையாதலால் அறிக்கை ஆண்டில் உணவுகள் எடுக்கப்படவில்லை.

**<u>தொழில்வரி அச்ச அருவருப்பு பணிகள்.</u>**

அறிக்கை அச்ச அருவருப்பு வணிகங்கள் நடத்த உரிமையாணை வழங்கிய வகையில் வருமானம் ரூ. 10,000/– டி.என்.ஒ. உணவு கலப்பட சட்ட லைசென்ஸ் கட்டணம் ரூ. 1,34,000/– வசூலிக்கப்பட்டுள்ளது.

**<u>நிதி நிலைமை</u>**

2000–2001–ம் ஆண்டு முதல் புதிய கணக்குமுறைத் திட்டம் (New Accounting system) அமுல்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி 2010–2011–ம் ஆண்டில்

| | | |
|---|---|---|
| வரவு | – | ரூ. 687.12 லட்சம் |
| செலவு | – | ரூ. 681.55 லட்சம் |

ஆண்டின் முடிவில் இறுதி இருப்பு ரூ. 57.00 லட்சம் பொதுவாக நகர்மன்றத்தின் நிதி நிலைமை திருப்திகரமாக உள்ளது.

**<u>தணிக்கைத்தடைகள்</u>**

இந்நகராட்சியில் தற்போது 2007–2008–ம் ஆண்டு முடிய தணிக்கை நடைபெற்று முடிவுற்ற வருடங்களுக்கு 118 தணிக்கைத்தடை நிலுவையாக உள்ளது.

**<u>சிறுசேமிப்பு</u>**

அறிக்கை ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் குறியீடு ரூ. 290.00 லட்சம் இந்நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. பின்னர் இக்குறியீடு ரூ. 290.00 லட்சமாக உயர்த்தப்பட்டது. இதில் ரூ. 290.00 லட்சம் சிறுசேமிப்பு தொகை வசூல் செய்யப்பட்டது இது 100% சதவீதமாகும்.

**<u>பொது</u>**

அறிக்கை ஆண்டில் நிதி நிலைமைச் சீராக இருந்தது. அறிக்கை ஆண்டில் இந்நகராட்சிப்பகுதியில் யாதொரு தொற்றுநோய் பரவவில்லை. இந்நகர்மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. நகராட்சி நிலைக்கேற்ப நகரில் சாலை பராமரிப்பு மற்றும் இதர பணிகள் செய்து கொடுக்கப்பட்டது.

நகராட்சி நிர்வாகம் சிறந்த முறையில் செயல்பட நகர்மன்றத்தலைவர் நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் நகராட்சி அலுவலர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பு நல்கப்பட்டது.

**<u>கடன்கள்</u>**

அறிக்கையாண்டிலை ஆரம்பத்தில் உள்ள கடன் தொகை ரு. 73.80 லட்சம் இதில் அறிக்கை ஆண்டில் அசல் மற்றும் வட்டியுடன் சேர்த்து மொத்தம் ரூ. 29.71 லட்சம் செலுத்தப்பட்டுள்ள நிலுவைப்பட்டியல் இறுது நிலுவை ரூ. 73.40 லட்சம்அசல் உள்ளது.

**<u>திடக்கழிவு மேலாண்மைத் திட்டம்</u>**

திடக்கழிவு மேலாண்மைத்திட்டத்திற்கு ரூ.39.82 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து கீழ்க்கண்ட பணிகள் தேர்வு செய்யப்பட்டு உள்ளது.

| 13–வது மான்ய நிதிக்குழு | சாலைகள் | திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் | கணிப்பொறி பராமரிப்பு | மின்கட்டணம் |
|---|---|---|---|---|
| 2005–2006 | 663742 | 1327484 | 663742 | |
| 2006–2007 | 663742 | 1327484 | 663742 | |
| 2007–2008 | 331871 | 663742 | 331871 | |
| 2008–2009 | 331871 | 663742 | 331871 | |
| 2009–2010 | 331871 | 663742 | 331871 | |
| 2010–2011 | | | | 3000000 |

**<u>திடக்கழிவு மேலாண்மைத்திட்டத்தின் கீழ் 12 பணிகள் எடுக்கப்பட்டு உள்ளது.</u>**

**<u>முதல்நிலை சேகரத்திற்கு வாங்கப்பட்ட வாகனங்கள் விபரம்</u>**

48 எண்ணங்கள் தள்ளுவண்டிகளும், 120 சாதாரண பிளாஸ்டிக் தொட்டிகளும் 96 சமுதாய தொட்டிகளும் வாங்கி குப்பை சேகரிக்கும் பணிக்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**<u>இரண்டாம் நிலை சேகரத்திற்கு வாங்கப்பட்ட வாகனங்கள் விபரம்</u>**

1 டிப்பர் லாரி ரூ. 6.75லட்சத்திற்கு வாங்கப்பட்டு குப்பை அள்ளுவதற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் டம்பர் பிளேசர் வாகனம், டம்பர் பிளேசர் தொட்டி, வின்ட்ரோ1 டேனர் வாகனம் வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**<u>உரக்கிடங்கு அமைக்க நிலம் வாங்குதல் / கூடுதல் நிலம் வாங்குதல் நிலம் வாங்க எடுத்த நடவடிக்கை மற்றும் தற்போதைய நிலை.</u>**

புதியதாக உரக்கிடங்கு வாங்குவதற்கு 3 ஏக்கர் நிலம் உசிலம்பட்டி அருகாமையில் உள்ள வில்லாணிச்சாலையில் அரசு புறம்போக்கு நிலம் சர்வே எண். 5/1 ஒதுக்கீடு செய்து மாவட்ட ஆட்சித்தலைவர் மதுரை அவர்களின் கடித ந.க.எண்.24203/எச்1, நாள். 6.7.2010ல் நுழைவு அனுமதி பெற நடவடிக்கையில் உள்ளது.

**<u>தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியம் தடையின்மை சான்றிதழ் வழங்கிய விபரம்</u>**

தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம் மதுரையிடம் தடையின்மைச் சான்று பெறப்படவில்லை.

உரக்கிடங்கை மேம்படுத்த எடுக்கப்பட்ட வேலை விபரம் செயல்திறன் மற்றும் மதிப்பீடு விபரம்.

12 பணிகள் எடுக்கப்பட்டு ரூ. 72.00 லட்சத்திற்கு மதிப்பீடு கீழ்க்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | சிமிண்ட் சாலை அமைத்தல் | – | ரூ. 22.00 லட்சம் |
| 2. | குடிநீர் வசதி செய்தல் | – | ரூ. 4.00 லட்சம் |
| 3. | மின்வசதி செய்தல் | – | ரூ. 2.00 லட்சம் |
| 4. | சாலை அமைத்தல் | – | ரூ. 13.00 லட்சம் |
| 5. | காவலர் குடியிருப்பு அமைத்தல் | – | ரூ. 2.00 லட்சம் |
| 6. | சுற்றுசுவர் மற்றும் முகப்புவளைவு அமைத்தல் | – | ரூ. 2.50 லட்சம் |
| 7. | மரங்கள் அமைத்தல் | – | ரூ. 1.00 லட்சம் |
| 8. | கழிப்பறை அமைத்தல் | – | ரூ. 2.00 லட்சம் |
| 9. | வாகனம் நிறுத்தும் அறை அமைத்தல் | – | ரூ. 3.50 லட்சம் |
| 10. | உரக்குடவுன் அமைத்தல் | – | ரூ. 3.00 லட்சம் |
| 11. | டம்பர் பிளேசர் வாகனம் வாங்குதல் | – | ரூ. 12.00 லட்சம் |
| 12. | டம்பர் பிளேசர் தொட்டி வாங்குதல் | – | ரூ. 5.00 லட்சம் |

மேற்படி பணி நடைபெற மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**<u>பாதாள சாக்கடைத் திட்டம்</u>**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ரூ. 22.00 கோடிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணி நடைபெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**<u>பனிரெண்டாவது நிதிக்குழு பரிந்துரை மான்யம், எடுக்கப்பட்ட வேலை விபரம், செயல்திறன் மற்றும் செலவு விபரம்.</u>**

| | | |
|---|---|---|
| 12–வது மான்ய நிதிக்குழு பரிந்துரைத்திட்டம் 2005–06 | 663742 | மூன்று சிமிண்ட் சாலை பணிகள் எடுக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு 1000 மக்கள் பயன்படும் வகையில் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. |
| 2006–07 | 663742 | மூன்று சிமிண்ட் சாலை பணிகள் எடுக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு 1500 மக்கள் பயன்படும் கொண்டுவரப்பட்டுள்ளது. |
| 2007–08 | 322000 | ஒருசிமிண்ட் சாலை பணிகள் எடுக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. |
| 2008–09 | 350000 | ஒருசிமிண்ட் சாலை பணிகள் எடுக்கப்பட்டு |

| | | |
|---|---|---|
| | | பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. |
| 2009–2010 | 322000 | ஒரு மழைநீர் வடிகால் பணி எடுக்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது. |

**<u>பகுதி 2 திட்டம் – 2007–08</u>**

1. ஆடடி சாலை கட்டுதல் ரூ. 20.00 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் எடுக்கப்பட்டு பணி முடிவுற்றது.
2. மயானம் மேம்பாடு செய்தல் ரூ. 10.00 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் எடுக்கப்பட்டு பணிகள் முடிவுற்றது.
3. அலுவலக கட்டிடம் கட்டுதல் ரூ. 50.00 லட்சம் மதிப்பீட்டில் பணி எடுக்கப்பட்டு பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளது.

**<u>வெள்ள நிவாரணத் திட்டம்.</u>**

வெள்ளநிவாரணத் திட்டத்தின் கீழ் ரூ. 7.50 லட்சம் மதிப்பீட்டில் 2 சாலைகள் அமைக்கும் பணிகள் எடுக்கப்பட்டு பணி முடிவுற்றது.

**<u>சட்டமன்ற உறுப்பினர் அபிவிருத்தி நிதி</u>**

சட்டமன்ற உறப்பினர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூ. 4.50 லட்சம் மதிப்பீட்டில் 3 பணிகள் எடுக்கப்பட்டு முடிவுற்றது.

ஆணையாளர்,
உசிலம்பட்டி நகராட்சி.

<u>உசிலம்பட்டி நகராட்சியின் 26.05.2011–ம் தேதிய கூட்டம் 662–வது தீர்மான உண்மை நகல்.</u>

பொருள்

உசிலம்பட்டி நகராட்சியின் 2010–11–ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கு.

அலுவலக குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்.

நகர்மன்றத் தீர்மான எண்.662 நாள். 26.05.2011

செலவினம் அனுமதிக்கப்பட்டது.

(ஒம்) திருமதி. த. பழனியம்மாள்,
நகர்மன்றத் தலைவர்,
உசிலம்பட்டி நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
உசிலம்பட்டி நகராட்சி.